செ.வெ.எண்:135 நாள்:01.03.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் மதுபானங்களை கடத்துதல், கள்ளத்தனமாக விற்பனை செய்தல் போன்ற குற்றங்களுக்காக சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தி வாழ்பவர்களின் மறுவாழ்விற்கு உதவிட பயனாளிகளை தேர்வு செய்தல் தொடர்பான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

----

திருநெல்வேலி மாவட்டத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி, திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும் அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், ஆடு மற்றும் கறவை மாடுகள் வளர்த்தல், சுய தொழில்கள் மேற்கொள்ள உயர்ந்தபட்சமாக நபர் ஒன்றுக்கு ரூ.30,000/-க்கு மிகாமல் மானியமாக வழங்க அரசு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. மேற்படி நபர்களில் மறுவாழ்வுக் குழுவால் தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் கூட்டம் இன்று 01.03.2018 மாலை 4.00 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேற்படி குழுக் கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 17 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.30,000/- பெறுமான மாடுகள் வழங்க மொத்தம் ரூ.5.10லட்சத்திற்கு வழங்க குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உதவி ஆணையர் (கலால்) திரு.பழனிகுமார், டாஸ்மாக் முதுநிலை மண்டல மேலாளர் திரு.ஜீவராஜ், கால்நடைபராமரிப்புத் துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், டாஸ்மாக் மேலாளர் திரு.வடமலைமுத்து, கலால் வட்டாட்சியர் திரு.பால்துரை, கோட்ட கலால் அலுவலர்கள் திரு.கந்தசாமி, திரு.கோமதி சங்கர நாராயணன், திரு.நடராஜன், மதுவிலக்கு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.பிரேமா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.